2014 ஜூலை 31]

முற்பகல் 11-55

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுத் தலைவர் அவர்கள்.*

***திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுத் தலைவராக என்னைத் தேர்வு செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, என் சார்பிலும், எங்களது அகில இந்திய ஃபார்வர்டு ப்ளாக் கட்சி சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 110-விதியின்கீழ் 3 அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளார்கள். தமிழக மக்களுடைய நன்மதிப்பைப் பெற்று, மக்களுடைய கோரிக்கைகளை ஒவ்வொரு நாளும் நிறைவேற்றிக்கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த நேரத்திலே பாராட்ட விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக, எனது உசிலம்பட்டி தொகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைத்துத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 193 முதல் 212 வரையிலான 20 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014-2015 ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*